RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 171 | ஜூன்.28 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# சீசெல்ஸ் சென்றடைந்தார் பிரதமர் மோடி : உற்சாக வரவேற்பு

விக்டோரியா: ஜூன்.28-

3 நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான சீசெல்ஸ் நாட்டுக்கு பிரதமர் மோடி சென்றடைந்தார்.

சீசெல்ஸ் நாட்டின் 50ம் ஆண்டு தேசிய தினம் நாளை மறுநாள் (ஜூன் 29) கொண்டாடப்படுகிறது. இதில், பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள இருக்கிறார். மேலும், இந்திய கடற்படைக்கு சொந்தமான 2 கப்பல்கள், பாதுகாப்பு படையினரும் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்க இருக்கின்றனர்.

இந்தப் பயணத்தின் போது, சீசெல்ஸ் அதிபர் பேட்ரிக்குடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

இதற்காக, நேற்று காலை டில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்ற பிரதமர் மோடி,சீசெல்ஸ் நாட்டுக்கு சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நாட்டு அதிபர் பேட்ரிக் நேரில் சென்று வரவேற்றார். மேலும், இந்திய வம்சாவழியினரும் பிரதமர் மோடியை இந்திய பாரம்பரிய நடனங்களில் ஒன்றான



குட்ச் நடனமாடி ஆராவாரமாக வரவேற்றனர்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில்; சீசெல்ஸ் நாட்டுக்கு வந்தடைந்தேன். விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்த அதிபர் பேட்ரிக் ஹெர்மினிக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீசெல்ஸ் நாடு ஒரு மதிப்புமிக்க கடல்சார் கூட்டாளியாகவும், இந்தியாவின் நெருங்கிய நண்பராகவும் திகழ்கிறது. இரு நாடுகளின் மக்களின் நலனுக்காக, நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதையும், பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு பயனுள்ள பயணத்தை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, பிரதமர் மோடியும், சீசெல்ஸ் அதிபர் பேட்ரிக்கும் ஒரே காரில் பயணித்தனர். தேசிய தாவரவியல் பூங்காவுக்கு சென்ற பிரதமர், அங்கு மரக்கன்றை நடவு செய்தார்.

## முதல்வர் விஜய் தனது உதவியாளர்களின் அதிகாரப்பூர்வப் பதவிகளை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்: தி.மு.க.,

சென்னை, ஜூன்.28-

"முதல்வர் விஜய் தனது உதவியாளர்களின் அதிகாரப் பூர்வப் பதவிகளை பகிரங்கப் படுத்த வேண்டும்; அதோடு, எந்த அதி காரத்தின் கீழ் அவர்கள் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, அதிகாரிகளுக்கு உத்தரவுகளை பிறப்பிக் கிறார்கள் என்பதையும் பொது மக்களுக்கு விளக்க வேண்டும்" என்று திமுக எம்.பி. வில்சன் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "முதல்வர் விஜய் தலைமையில் நடைபெறும் அமைச் சரவைக் கூட்டங்கள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் இதர உயர்மட்ட அரசு ஆலோசனைகளில் ஜான் ஆரோக்கிய சாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் பங்கேற்பது குறித்து தீவிரக் கேள்விகள் எழுந்துள்ளன.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஜான் ஆரோக்கிய சாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகிய இருவரும், தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் நெருங்கிய உதவியாளர்களும் நண்பர்களும் ஆவர். இவர்கள் அரசில் என்ன அதிகாரப்பூர்வப் பதவிகளை வகிக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை; இருப்பினும், தலைமைச் செயலகத்தில் முதலவரின் அறைக்கு அருகிலேயே அவர்களுக்கு ஓர் அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அரசு ஊழியர்கள் இல்லை என்றால், ரகசிய ஆவணங்கள் பரிமாற ப்படும் மிக ரகசியமான கூட்டங்களில் அவர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் கலந்து கொள்கிறார்கள் ?

முதல்வர் ரகசியக் காப்புப் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ளார். இத்தகைய நபர்களை இதில் ஈடுபடுத்துவது அரசியலமைப்பு நெறிமுறைகள், அலுவல் விதிகள் (Rules of Business) மற்றும் அவரது ரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றைப் பின்பற்றுவது குறித்து தீவிரக் கவலைகளை எழுப்புகிறது.

இந்த இரு நபர்களின் அதிகாரப் பூர்வப் பதவிகளை முதல்வர் பகிரங்கப்படுத்த வேண்டும்; அதோடு, எந்த அதிகாரத்தின் கீழ் அவர்கள் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, அதிகாரிகளுக்கு உத்தரவு களைப் பிறப்பிக்கிறார்கள் என்பதைப் பொது மக்களுக்கு விளக்க வேண்டும்" என்று திமுக எம்.பி. வில்சன் வினவியுள்ளார்.

## மாணவர்களுக்கு சாதி பெயருடன் அடையாள அட்டை; செங்கோட்டையன் அறிவிப்பிற்கு விளக்கம் கேட்கும் முன்னாள் அமைச்சர்கள்

ஈரோடு, ஜூன்.28-

மாணவர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையில் சாதி பெயர் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் செங் கோட்டையன் தெரிவித் திருப்பது குறித்து முன்னாள் அமைச்சர்களான அன்பில் மகேஸ் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோர் விளக்கம் கேட்டுள்ளனர்.



கோபிச் செட்டிப் பாளையம் அடுத்துள்ள நம்பியூர் தனியார் பள்ளியில், முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தவெக கட்சியின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடை பெற்றது. இந்த விழாவில் வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் கலந்துகொண்டு 1000க்கும் மேற்பட்டோருக்கு நலதிட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், "பள்ளி மாணவர்கள் ஆண்டுதோறும் சாதி சான்றிதழ் பெறுவதில் இருக்கும் சிரமத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாணவர்களின் பெயர், சாதி, முகவரி, ஆதார் எண், ரத்த வகை உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அடையாள அட்டை அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது" எனக் கூறினார்.

மேலும், முதலமைச் சரின் உத்தரவின் பேரில் முதற்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவருடைய இந்த அறிவிப்பிற்கு பல்வேறு தரப்புகளிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. பள்ளி மாணவர்களின் சாதி விவரங்களை வகுப்பறையில் வெளிப் படையாக கூறிவதை தவிர்க்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான அடையாள அட்டையில் சாதி பெயர் குறிப்பிடுவதை ஏற்க முடியாது என பல்வேறு தரப்புகளிலும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், மாணவர்களின் ரத்த வகை, ஆதார் எண் போன்றவற்றை மட்டும் அறிய வேண்டிய இடத்தில், சாதி குறித்த அடையாளமும் தேவை தானா? என முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட அவர், "மாணவர்களின் அடிப்படை தகவல்கள் அடங்கிய ஒரு கார்டு வழங்கப் போகிறீர்களா? அப்படியென்றால் அதில் சாதி குறித்த தகவல்களும் இருக்குமென்றால் அது தேவையில்லாதது. மாணவர்களின் ரத்த வகை, ஆதார் எண் போன்றவற்றை மட்டும் அறிய வேண்டிய இடத்தில், சாதி குறித்த அடையாளமும் தேவைதானா? இடஒதுக்கீடு மற்றும் அரசின் சமூக நீதி பயன்களை பெற வேண்டிய இடத்தில் மட்டும் சாதி சான்றிதழ் விவரங்களை வெளிப் படுத்திக் கொள்ளலாம். அமைச்சர் இதுகுறித்து விரிவான பதில் அளிக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேபோல், மாணவர் களிடையே சாதி அடையாளத்தை ஊக்குவிக்கும் வகையிலான இந்த கருத்து குறித்து அமைச்சர் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டுமென முன்னாள் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசும் தனது எகஸ் தளத்தில் பதிவிட் டுள்ளார்.

அவருடைய பதி வில், "அரசுப் பள்ளி மாணவர் களுக்கு சாதி அடையாளத் துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது குறித்து வருவாய்த் துறை அமைச்சர் செங் கோட்டையன் பேசியிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. அமைச்சரின் இந்த பேச்சின் உண்மையான நோக்கம் என்ன? இது அரசின் நிலைப்பாடா? மாணவர்களிடையே சாதி அடையாளத்தை ஊக்குவிக்கும் வகையிலான இந்த கருத்து குறித்து, தமிழ்நாட்டு மக்களின் மனதில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு அமைச்சர் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

## கர்நாடக பின்னணி கொண்டவரை தமிழகத்தின் டெல்லி பிரதிநிதியாக்கியது ஏன்? : விளக்கம் கோரும் பிரேமலதா

சென்னை, ஜூன்.28-

"கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருப்பது பொதுமக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. ஏன் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். எனவே, தமிழக அரசு இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, வெங்கட நாராயணாவின் நியமனத்தை திரும்பப் பெற வேண்டும்," என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "மேகே தாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசின் டெல்லி பிரதிநிதியாக வெங்கட நாராயணா நியமிக்கப்பட்டிருப்பதை தேமுதிக சார்பில் கடுமையாக கண்டிக் கிறோம்.

ஏற்கனவே கர்நாடக மாநில முதல்வர் டி.கே. சிவக்குமார் மற்றும் அங்குள்ள நீர்வளத்துறை அமைச்சர் "எங்கள் மாநில எல்லைக்குள் மேகேதாட்டு அணையை கட்டுவதை யாராலும் தடுக்க முடியாது" என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். பல ஆண்டுகளாக தமிழ்நாடு கர்நாடக மாநிலங்களுக்கு இடையே காவிரி நீர் பிரச்சனை நீடித்து வரும் நிலையில், மேகேதாட்டு அணை தொடர்பாகவும் தமிழ்நாட்டின் உரிமையை பாதுகாக்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உச்ச நீதிமன்றமும், காவிரி மேலாண்மை தொடர்பான அமைப் புகளும் இந்த விவகாரத்தில் சட்ட மற்றும் நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்கியுள்ள நிலையிலும், கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியில் உறுதியாக இருப்பதாக தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில், கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதி நிதியாக நியமித் திருப்பது பொதுமக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

இது "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது" போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான நபர்கள் பலர் இருக்கையில், ஏன் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். எனவே, தமிழக அரசு இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, வெங்கட நாராயணாவின் நியமனத்தை திரும்பப் பெற வேண்டும் என தேமுதிக சார்பாக வலியுறுத்துகிறோம்." என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

## எஃப்.ஐ.ஆர் பதிவை மட்டுமே காரணம் காட்டி பாஸ்போர்ட் வழங்க மறுக்க முடியாது உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஜூன்.28-

குற்றவியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லாத நிலையில், ஒருவர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டிருப்பதை மட்டும் காரணம் காட்டி பாஸ்போர்ட் வழங்க மறுப்பது சட்டவிரோதமானது என உயர் நீதிமன்ற மதுரைக்கிளை அமர்வு தெரிவித்திருக்கிறது.



திருச்சியைச் சேர்ந்த சதீஷ் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், "கடந்த மார்ச் மாதம் 10ஆம் தேதி புதிய பாஸ்போர்ட் வழங்கக் கோரி விண்ணப்பம் செய்து இருந்தேன். எனது விண்ணப்பம் நீண்ட காலமாக பரிசீலிக்கப் படாமல் நிலுவையில் வைக்கப் பட்டுள்ளது. எனவே எனது பாஸ்போர்ட் விண்ணப்பத்தை விரைந்து பரிசீலித்து, புதிய பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கானது நீதிபதி ஹேமந்த் சந்தன் கவுடர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரர் சதீஷ் மீது ராம்ஜி நகர் காவல் நிலையத்தில் 2024 ஆம் ஆண்டு ஒரு குற்றவியல் வழக்கில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளதால், பாஸ்போர்ட் விண்ணப்பம் நிலுவையில் இருப்பதாக தெரிவித்தார்.

இதனை பதிவு செய்துகொண்ட நீதிபதி, விண்ணப்பதாரருக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் சம்பந்தப் பட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால் மட்டுமே பாஸ்போர்ட் வழங்க மறுக்க முடியும். வெறும் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டிருப்பது மட்டும் பாஸ்போர்ட் வழங்குவதற்கு தடையாக இருக்காது.

எனவே, எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப் பட்டிருப்பதை மட்டுமே காரணம் காட்டி மனுதாரரின் பாஸ்போர்ட் விண்ணப்பத்தை நிலுவை யில் வைத்திருப்பது பாஸ்போர்ட் சட்டத்தின் விதிகளுக்கு முரணானது" என்றார்.

இதையடுத்து, மனு தாரரின் விண்ணப் பத்தை சட்டப்படி பரிசீ லித்து, பிற தகுதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், புதிய பாஸ்போர்ட்டை திருச்சி மண்டல பாஸ்போர்ட் அலுவலர், நான்கு வாரங்களுக்குள் வழங்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## மாணவர்களின் அடையாள அட்டையில் சாதி விவரம் இடம்பெறச் செய்வது ஏற்புடையதல்ல

சென்னை, ஜூன்.28-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கக் கூடிய அடையாள அட்டையில் மாணவர்களின் சாதி குறித்த விவரங்களையும் இடம் பெறச் செய்யப் போவதாக தமிழக அரசின் வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

மாணவர்களின் சாதி விவரங்கள் அடையாள அட்டையில் வெளிப் படுத்துவது அவசியமற்றது. இது மாணவர்களிடையே சாதிப் பாகுபாட்டை அதிகரிக்கும். ஏற்கெனவே பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களிடையே சாதி பாகுபாடுகளும், மோதல்களும் அதிகரித்து வரும் நிலையில், இப்படிப்பட்ட ஒரு திட்டம் சரியானது அல்ல.

தீண்டாமை ஒழிப்பு, சாதிய ஒடுக்குமுறைகள் மற்றும் வன்முறைகள் ஒழிப்பு, சாதி ஒழிப்பு போன்றவற்றிற்கும் சமத்துவ சிந்தனைக்கும் எதிராக இது அமைத்துவிடும். கல்வி நிறுவனங்களில் சாதிய பாகுபாட்டை கலைவது தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதி அரசர் சந்துரு தலைமையிலான குழு மாணவர் மத்தியில் சாதியை வெளிப்படுத்தும் அடையாளங்களை கலைந்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பது உட்பட ஏராளமான பரிந்துரைகளை வழங்கி உள்ளது.

அவற்றை நடைமுறைப்படுத்திட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில், தமிழ்நாடு அரசு மாணவர்களுக்கான அடையாள அட்டையில் சாதி பெயரை இடம்பெறச் செய்வது என்பது ஏற்புடையதல்ல. இத்தகைய முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.



## தேவகோட்டை வட்டம், கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ ஜெகன்முத்து மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

சிவகங்கை, ஜூன்.28-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கிருஷ்ணராஜபுரம் மேற்கு தெருவில் அமர்ந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகன், ஸ்ரீ ஜெகன்முத்து மாரியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா இன்று அதிவிமரிசையாக நடைபெற்றது.விழாவின் ஒரு பகுதியாக அனுக்ஞை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, புண்யாஹாவாசனம், ஸ்ரீ மஹாகணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹனம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் உள்ளிட்ட பல்வேறு சடங்குகள் முறைப்படி நடைபெற்றது இரண்டாம் கால யாகபூஜை ஆரம்பமாகி, கோபூஜை, லட்சுமி பூஜை, பூர்ணாகுதி மற்றும் தீபாராதனை தொடர்ந்து கடம் புறப்பாடு சென்று வேத மந்திரங்கள் சொல்லி கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடத்தினர்.



விழா கமிட்டியாளர்கள், மகளிர் மன்ற குழு மற்றும் கிருஷ்ணராஜபுரம் பொதுமக்கள் இணைந்து இந்த விழாவை சிறப்பாக நடத்தினர். மஹா கும்பாபிஷேகத்திற்குப் பின் ஆசீர்வாதம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




## அதிக சத்தம் எழுப்பிய ஹார்ன்களுக்கு 'செக்'! ஆரப்பாளையத்தில் 31 வாகனங்கள் மீது அதிரடி நடவடிக்கை

மதுரை, ஜூன்.28-

மதுரை மாநகர் காவல்துறை ஆணையரின் உத்தரவின்படியும், போக்குவரத்து துணை ஆணையரின் வழிகாட்டுதலின்படியும், அதிக ஒலி எழுப்பும் ஒலிப்பான்களை (ஹார்ன்கள்) பயன்படுத்தும் வாகனங்கள் மீது ஆரப்பாளையம் பேருந்து நிலையப் பகுதியில் சிறப்பு சோதனை நடத்தப்பட்டது.

மாநகர் போக்குவரத்து காவல்துறை, போக்குவரத்துத் துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இணைந்து மேற்கொண்ட இந்த சோதனையில், தனியார் பேருந்துகள், அரசு பேருந்துகள், மினி பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் என 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.




சோதனையில், 31 வாகனங்களில் விதிமுறைகளை மீறி அதிக ஒலி எழுப்பும் ஒலிப்பான்கள் பொருத்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. அவை உடனடியாக அகற்றப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட வாகனங்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.இந்த நடவடிக்கையில் தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் பஞ்சவர்ணம், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் மாணிக்கம், கரிமேடு போக்குவரத்து சார்பு ஆய்வாளர் சந்தானகுமார், மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரி நித்யா மற்றும் ஆரப்பாளையம் பேருந்து நிலைய மேலாளர் ஜெயராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் விஜய் பிறந்தநாள்.சிவகங்கை பாலர்விடுதியில் காலை உணவு வழங்கப்பட்டது ஒசெ. பரமேஷ்வரன் , துணைச்செயலாளர் அகிலா சங்கர் ஏற்பாடு

சிவகங்கை, ஜூன்.28-

சிவகங்கை மாவட்டம் முழுவதும் தவெகவினர் முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்...

அதனடிப்படையில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் . இனிப்பு மற்றும் அன்னதானம். கல்வி உபகரணங்கள் வழங்கியும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்...அந்த வகையில் சிவகங்கை தெற்கு ஒன்றிய தவெக துணைச் செயலாளர் கீழக்கண்டனி அகிலா சங்கர் ஏற்பாட்டில்



சிவகங்கை உடையார் சேர்வை ஊரணி அருகில் உள்ள பாலர் பாதுகாப்பு விடுதியில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவாக அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது... சிவகங்கை தெற்கு ஒன்றியக்கழகச் செயலாளர் வேம்பன்குடி பரமேஷ்வரன் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்...மாவட்ட மகளிரணி அமைப்பாளர் தமிழரசி பிரதீப் . நகர மகளிரணி அமைப்பாளர் இராஜேஷ்வரி . ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் காஞ்சிரங்கால் லதா ஒன்றிய செயற்குழு மகேஷ்வரி. ஷர்மிளா. மானாமதுரை அர்ச்சனா. ராஜேஷ்வரி . விக்னேஷ். அருண் .உள்ளிட்ட சிவகங்கை தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் என ஏராமானோர் கலந்து கொண்டனர்... நிகழ்ச்சி ஏற்பாடுகளை தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் கீழக்கண்டனி அகிலா சங்கர் சிறப்பாக செய்திருந்தார்...

## கல்லூரிப் பருவத்திலேயே அரசு பணிக்கு தயாராக வேண்டும் - அருண் வடிவரசன் IFS அறிவுரை

ஊட்டி, ஜூன்.28-

உதகை அரசு கலை அறிவியல் கல்லூரியில், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன் அமைப்பு மற்றும் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) இணைந்து கல்லூரி மாணவர்களுக்கான போட்டித் தேர்வு வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தின.நிகழ்ச்சிக்கு கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலரும், தாவரவியல் துறைத் தலைவருமான சீஜா தலைமை வகித்தார். துறை பேராசிரியர் சதீஷ்குமார், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டப் பொறுப்பாளர் சாந்தமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.





நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய வனப்பணி (IFS) தேர்வில் வெற்றி பெற்ற அருண் வடிவரசன் மாணவர்களிடையே பேசுகையில், “போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான மிக முக்கியமான தகுதி தன்னம்பிக்கையும் தொடர்ந்து முயற்சி செய்யும் மனப்பாங்கும்தான். அரசு பணியை இலக்காகக் கொண்ட மாணவர்கள் கல்லூரிப் பருவத்திலேயே அதற்கான அடித்தளத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். வெற்றிக்கான பாதை எளிதானதல்ல என்றாலும், சரியான திட்டமிடல் மற்றும் விடாமுயற்சி இருந்தால் எந்த இலக்கையும் அடைய முடியும்”. “TNPSC தேர்வுக்கான தயாரிப்பும் அரசுப் பணிக்கான தயாரிப்பும் ஒன்றே. UPSC மற்றும் TNPSC போன்ற போட்டித் தேர்வுகள் பாடப்புத்தக அறிவை மட்டும் சோதிப்பதில்லை. சமூகத்தில் நடைபெறும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளும் திறன், பகுப்பாய்வு சிந்தனை, முடிவெடுக்கும் திறன் மற்றும் பொது அறிவு ஆகியவற்றையும் மதிப்பீடு செய்கின்றன. எனவே மாணவர்கள் தினசரி செய்தித்தாள்களை வாசித்து நடப்பு நிகழ்வுகளை தொடர்ந்து அறிந்து கொள்ள வேண்டும்”

UPSC தேர்வின் கட்டமைப்பு முதற்கட்டத் தேர்வு (Preliminary Examination), முதன்மைத் தேர்வு (Main Examination) மற்றும் நேர்முகத் தேர்வு (Interview) ஆகிய மூன்று நிலைகளிலும் தனித்தனி திறன்கள் தேவைப்படுகிறது. பொதுஅறிவு, இந்திய வரலாறு, அரசியல் அமைப்பு, சுற்றுச்சூழல், அறிவியல், கணிதத் திறன் மற்றும் திறனாய்வு பாடங்களில் மாணவர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

“வெளிப்புற ஊக்கம் சில நாட்கள் மட்டுமே நீடிக்கும். ஆனால் உள்ளத்தில் உருவாகும் இலட்சியமும் ஆர்வமும் வாழ்நாள் முழுவதும் வழிநடத்தும். தோல்விகள் வெற்றிக்கான படிக்கட்டுகள். ஒருமுறை அல்லது பலமுறை தோல்வி ஏற்பட்டாலும் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். விருப்பத்துடனும் அர்ப்பணிப்புடனும் படிக்கும் மாணவர்களே உயர்ந்த இலக்குகளை அடைகிறார்கள்” என்றார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசுகையில், “அரசுப் பணி என்பது வெறும் வேலைவாய்ப்பு மட்டுமல்ல; மக்களுக்கு அரசு நலத்திட்டங்களையும் சேவைகளையும் கொண்டு சேர்க்கும் மகத்தான சமூகப் பொறுப்பாகும். குறிப்பாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று அரசுப் பணிகளில் சேர வேண்டும். அதற்காக கல்லூரி காலத்திலேயே திட்டமிட்டு தயாராக வேண்டும். செய்தித்தாள் வாசிப்பு, பொது அறிவு வளர்ப்பு, வாசிப்பு பழக்கம் மற்றும் சிந்தனைத் திறன் மேம்பாடு ஆகியவை வெற்றிக்கான முக்கிய கருவிகளாக அமையும்” என்றார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் UPSC, TNPSC உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகள் தொடர்பாக தங்களது சந்தேகங்களை எழுப்பி விளக்கங்களைப் பெற்றனர்.முன்னதாக மாணவி கிருபாலினி வரவேற்றார் நிறைவில் மாணவி பிரியதர்ஷினி நன்றி கூறினார்.

## முதல்வர் விஜய் பிறந்தநாள் முன்னிட்டு தவெக கிளைச்செயலாளர் கருணாகரன் ஏற்பாட்டில் சித்தலூரில் கொடியேற்றி அறுசுவை அசைவ உணவு விருந்து

### மாசெ. முத்துபாரதி தலைமை ஒசெ. பரமேஷ்வரன் முன்னிலை

சிவகங்கை, ஜூன்.28-

சிவகங்கை தெற்கு மாவட்டம். சிவகங்கை தெற்கு ஒன்றியம் தமிழக வெற்றிக் கழக சித்தலூர் கிளைக்கழகம் சார்பில் தமிழ்முதலமைச்சர் சி. ஜோஸப் விஜய் 52 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கிளைக்கழக செயலாளர் கருணாகரன் ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றியினை வைத்து சுமார் அறுநூறுக்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது... சிவகங்கை தெற்கு மாவட்டக்கழக செயலாளர் முத்துபாரதி தலலமையிலும் சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் வேம்பன்குடி பரமேஷ்வரன் முன்னிலையிலும் நடைபெற்றது...தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி . ஒன்றிய



செயலாளர் பரமேஷ்வரன் . மாவட்ட பொருளாளர் கண்ணதாசன் . ஆகியோர் கலந்து கொண்டு அசைவ உணவு அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்...

இந்த நிகழ்ச்சியின்போது மாவட்ட இளைஞரணி தினே ஷ்குமார் . மாவட்ட மகளிரணி தமிழரசி பிரதீப். மாவட்ட மாணவரணி தமறாக்கி பிரபுக்கண்ணன் . மாவட்ட கொள்கைபரப் அமைப்பாளர் ரஞ்சித் கண்ணன் . ஒன்றிய துணைச் செயலாளர் பேட்ரோல் பம்ப் ரமேஷ்மாவட்ட செயற்குழு உறுப்பினர்களான முத்துக்குமார். செல்வமீனாள் . மண்டல ஐடி விங் இணை ஒருங்கிணைப்பாளர் ஜனார்த்தனன். மாவட்ட வர்த்தக அணி சசிக்குமார். ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் காஞ்சிரங்கால் லதா. இடையமேலூர் பிரியங்கா . மாத்தூர் வாசுதேவன். சித்தலூர் ராஜ்குமார். ஜெயபால். கிருஷ்ணன். முத்துராஜா. முருகேசன் . செல்வம் . காளீஸ்வரி . மாத்தூர் மலர்விழி. கண்ணாரிருப்பு ப்ரியா ராஜாராம். பாலமுருகன். வேலாங்குளம் ப்ரியா . மாத்தூர் முத்துராக்கு உள்ளிட்ட மாவட்ட. ஒன்றிய. கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை சித்தலூர் தவெக கிளைக்கழக செயலாளர் சித்தலூர் கருணாகரன் சிறப்பாக செய்திருந்தார்....

# தேவகோட்டை நகரத்தார் பால தண்டாயுதபாணி சாரிட்டபிள் ட்ரஸட் ன் வெள்ளி விழா

தேவகோட்டை, ஜூன் .28-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகரத்தார் விழா வளாகத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் கனிம வளத்துறை அமைச்சரின் தந்தை இருமதி துரை கருணாநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் மேலும் கண்டனூர் அருளாடியார் ஆசி உரை வழங்கினார்கள்.

ஆன்மிக மாமணி விருது நாக. சண்முகம், அரசியல் மாமணி விருது பாகனேரி ரவி, தொழில் மாமணி விருது சொக்கநாதபுரம் வயிரவன் பாலு, செந்தில் ஆகிய நால்வருக்கு அருளாடியார் வழங்கி ஆசி உரை நிகழ்த்தினார்கள். நால்வரையும் அரிமா இயக்கத்தின் முன்னாள் கவர்னர் வீர. சின்ன




அருணாச்சலம் பாராட்டிப் பேசினார்.ட்ரஸ்ட் நிறுவனர் இலட்சியப் பேனா இராமநாதன் எழுதிய நூலை தமிழ் செம்மல் டாக்டர் குமரப்பன் வெளியிட்டதை தேவகோட்டை நகராட்சி முன்னாள் துணைத் தலைவர் LPVபழனியப்பன்




பெற்றுக்கொண்டார்.

சென்னை வசந்தா பிரசுரம் அச்சடித்த புத்தகம் 250 யை அன்பளிப்பாக விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப் பெற்றது.

காலையில் வெள்ளி வேல் துணையுடன் பால் குடம் எடுக்கப் பெற்றது. வெள்ளி வேல் எடுத்து வந்தது முன்னாள் தலைவர் பழ.விஸ்வநாதன். பால் குட நிகழ்வை ஜமீந்தார் குடும்பத்தை சேர்ந்த சின்ன வீரப்பன் மற்றும் அவரது துணைவியார் துவக்கி வைத்தார்கள்.

முற்பகலில் வேல் பூஜை , வெள்ளி ஊஞ்சல் வைபவம் நடைபெற்றது இதில் சுமார் 700 மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு, முருகன் அலங்காரத்துடன் உள்ள ஊஞ்சலை தங்கள் கரங்களால் ஆட்டி அருள் பெற்றனர். அனைவரும் பால தண்டாயுதபாணி அன்னதான ட்ரஸ்ட் வழங்கிய அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.ட்ரஸ்ட் தலைவர் லெட்சுமணன் தலைமை தாங்கினார்.முன்னாள் தலைவர் மாணிக்கம் நன்றி உரை நிகழ்த்தினார். சேவுகன் அண்ணாமலை தன் துணைவியாருடன்

தொகுத்து வழங்கி சிறப்பித்தார்கள்..






# ஊட்டியில் 17வது பிக் பாஸ் இன்டர்நேஷனல் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது

நீலகிரி, ஜூன்.28-

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள ரெக்ஸ் பள்ளியில் 17வது பிக் பாஸ் இன்டர்நேஷனல் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் ஸ்காட்லாந்து உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 400 க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

கிங்சன் பஞ்சாஸ் நிறுவனர் ரென்ஷி கார்த்திகேயன், தலைமையில் ரென்ஷி வனிதா கார்த்திகேயன் முன்னிலையில், சென்செய் மிருதுளா மற்றும் சென்செய் வசந்த் ஆகியோர் ஒருங்கிணைப்பில் போட்டிகள் நடைபெற்றன.

இதில் சிறப்பு விருந்தினராக நீலகிரி மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தார். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஸ்போர்ட்ஸ் கோட்டா ஃபார்ம்2 சான்றிதழ்கள், கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது

இதில் கலந்து கொண்ட தாம்பரத்தை சேர்ந்த மாணவர்கள் கே.வி.சஞ்சய் ஷிவ், கவிஷ், ஷமித், பிரகதி, தருண், பவித்ரா, சிவப்பிரியன், பூஜா, நிவேதியன், கரண், கவிண், ஜோகித் விகாஷ், எஸ்வந்த், விதிஷா, ஆரோகி ஆகியோர் கத்தா, குமுத்தே பிரிவில் கலந்துகொண்டு

கத்தா மற்றும் குமித்தே பிரிவுகளில் பங்கேற்ற மாணவர்கள் பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும் தங்கள் பள்ளிகளுக்கும் பெருமை சேர்த்தனர்.

# இந்தியாவின் முதல் ஃபீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷாவின் 18வது நினைவு தினம்:ஊட்டியில முப்படைகள் சார்பில் முழு ராணுவ மரியாதையுடன் வீரவணக்கம்

நீலகிரி, ஜூன்.28-

இந்தியாவின் முதல் ஃபீல்டு மார்ஷல், சாம் ஹோர்முஸ்ஜி பிராம்ஜி ஜம்ஷெட்ஜி மானெக்ஷா (டி.எஃப்.சி) அவர்களின் 18வது நினைவு தினத்தை முன்னிட்டு, உதகமண்டலத்தில் (ஊட்டி) உள்ள பார்சி ஜோராஸ்ட்ரியன் மயானத்தில் இன்று முப்படைகளின் சார்பில் சிறப்பான மலர்வளையம் வைக்கும் அஞ்சலி நிகழ்ச்சி முழு ராணுவ மரியாதையுடன் நடைபெற்றது. 'சாம் பகதூர்' என்று அன்போடு அழைக்கப்படும் அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவைப் போற்றும் வகையில், டிஃபென்ஸ் சர்வீசஸ் ஸ்டாஃப் காலேஜ் (DSSC), வெல்லிங்டன் நிலைய தலைமையகம் மற்றும் மெட்ராஸ் ரெஜிமென்டல் சென்டர் (MRC) ஆகியவை இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன. இதில்




மூத்த ராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். முப்படைத் தலைமைத் தளபதி (CDS), ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள், தென்னக ராணுவ கமாண்ட் மற்றும் தக்ஷின் பாரத் பகுதி ஆகியவற்றின் சார்பில், மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அவரது நினைவிடத்தில் மலர்வளையங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இது ஒட்டுமொத்த இந்திய ஆயுதப் படைகளும் அவர் மீது கொண்டுள்ள எல்லையற்ற மரியாதையை வெளிப்படுத்துவதாக அமைந்தது.இந்த நிகழ்வில் லெப்டினன்ட் ஜெனரல் மனிஷ் மோகன் எர்ரி (DSSசியின் கமாண்டன்ட்), மேஜர் ஜெனரல் கார்த்திக் சி ஷேஷாத்ரி (8 கூர்கா ரைஃபிள்ஸ் ரெஜிமென்ட்டின் கர்னல்) மற்றும் பிரிகேடியர் கிருஷ்ணேந்து தாஸ் (வெல்லிங்டன் கன்டோன்மென்ட் நிலைய தளபதி மற்றும் MRCயின் கமாண்டன்ட்) உள்ளிட்ட பல முக்கிய ராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டு தங்களது மரியாதையைச் செலுத்தினர். இந்த அஞ்சலி நிகழ்ச்சி மிக நேர்த்தியான ராணுவ ஒழுங்குடன் நடைபெற்றது. மெட்ராஸ் ரெஜிமென்ட் குழுவினரின் சிறப்பான 'கார்டு ஆஃப் ஹானர்' (Guard of Honor) மரியாதையைத் தொடர்ந்து, ராணுவ பியூக்ளர்கள் (Buglers) முழங்கிய உருக்கமான 'லாஸ்ட் போஸ்ட்' (Last Post) இசையுடன், புகழ்பெற்ற அந்தப் பொதுத் தளபதியின் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் கடைப்பிடிக்கப்பட்டது.

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் போரில் இந்தியாவின் மாபெரும் ராணுவ வெற்றிக்கு முதன்மைச் சிற்பியாகத் திகழ்ந்தவர் ஃபீல்டு விமார்ஷல் மானெக்ஷா. இந்தப் போரின் முடிவில்தான் 93,000க்கும் அதிகமான எதிரிப் படை வீரர்கள் நிபந்தனையின்றி சரணடைந்தனர், அத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க வங்காளதேச விடுதலையும் சாத்தியமானது. அவரது வாழ்நாள் சாதனைகளைப் பாராட்டி, 1973 ஜனவரியில் அவருக்கு 'ஃபீல்டு மார்ஷல்' என்ற உயரிய ஆயுட்கால அந்தஸ்து வழங்கப்பட்டது. ஓய்விற்குப் பிறகு, குன்னூரில் தனது வாழ்நாளைக் கழிக்க விரும்பிய அவர், கடந்த 2008 ஜூன் 27 அன்று இயற்கை எய்தினார். இன்றைய நிகழ்வில், உள்ளூர் பார்சி சமூகத்தைச் சேர்ந்த மக்களும் ராணுவத் தலைவர்களுடன் இணைந்து அஞ்சலி செலுத்தினர். இது பொதுமக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழமான பிணைப்பையும், அவரது அசாத்திய ராணுவ வியூகம், நேர்மை மற்றும் நற்பண்புகளையும் நினைவுகூரும் விதமாக அமைந்தது.



# மாதவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி!

மாதவரம், ஜூன்.28-

சென்னை மாவட்டம் மாதவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி வட்டாச்சியர் திருவெங்கடம் தலைமையில் வருவாய் தீர்வாயம் எனப்படும் ஜமாபந்தி(பசலி) 1435ல் உள்ள மாதவரம் உள்வட்டத்திற்கு உட்பட்ட புழல் 24வது வட்டத்தில் வசித்துவரும் பயனாளிகளுக்கு விடுபட்ட மற்றும் புதிய வீட்டு மனை பட்டா வழங்கிட வேண்டி 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.சேட்டு தலைமை ஏற்று மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் ராமசந்திரன், உதவி அலுவலர்கள் ரவிச்சந்திரன், அர்ச்சனா ஆகியோரிடம் மனுவினை வழங்கினார். பின்னர் மனுதாரர் வழங்கிய மனுவினை பெற்று கொண்டு உரிய நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்.

# தாராபுரத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி: மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ருஷ்டி சிங் தொடங்கி வைத்தார்!

தாராபுரம், ஜூன்.28-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராகவும், அதுகுறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடம் ஏற்படுத்தும் வகையிலும் பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தாராபுரம் புதிய காவல் நிலைய வளாகத்தில் இருந்து புறப்பட்ட இந்த விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட முதன்மை காவல் கண்காணிப்பாளர் (SP) திருமதி. ஸ்ருஷ்டி சிங் அவர்கள் பச்சைக் கொடியசைத்து முறைப்படி தொடங்கி வைத்தார். இந்நிகழ்விற்கு தாராபுரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிவகுமார் மற்றும் காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதிய காவல் நிலைய வீதியில் இருந்து புறப்பட்ட இப்பேரணி, முருகன் கோவில், துர்க்கை அம்மன் கோவில், அண்ணா சிலை, பெரிய கடைவீதி, டி.எஸ். கார்னர் மற்றும் சின்னக்கடை வீதி வழியாக விளையாட்டு வீரர்கள் மாணவர்கள் போதை பொருள் விழிப்புணர்வு பதாய்களை கையில் ஏந்தியவாறு பொதுமக்களுக்கு




துண்டு பிரசுரம் வழங்கி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியபடி சென்றது. இறுதியாக ஜின்னா மைதானத்தில் உள்ள கூடைப்பந்து கழக மைதானத்தை அடைந்து பேரணி நிறைவுற்றது.

பேரணியின் நிறைவாக ஜின்னா மைதானத்தில் திரண்டிருந்த மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ருஷ்டி சிங் அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

"தமிழகத்தை போதை இல்லாத மாநிலமாக மாற்ற இளைஞர்களும், மாணவர்களும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உங்கள் வீடுகளிலோ அல்லது சுற்றுவட்டாரத்திலோ யாரேனும் போதை பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தால், அதன் தீவிர பாதிப்புகள் மற்றும் உடல்நலக் கேடுகள் குறித்து அவர்களுக்கு எடுத்துரைத்து நல்வழிப்படுத்த வேண்டும்."

தொடர்ந்து பேசிய அவர், திருப்பூர் மாவட்டத்தில் போதைப்பொருள் புழக்கம், விற்பனை மற்றும் கடத்தல் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், உடனுக்குடன் புகார் அளிக்கவும் தமிழ்நாடு காவல்துறை வழங்கியுள்ள முக்கிய செயலிகள் மற்றும் எண்களைப் பட்டியலிட்டார்:

காவல் உதவி (KAAVAL UTHAVI) செயலி: தமிழ்நாடு காவல்துறையின் இந்த அதிகாரப்பூர்வ செயலி மூலம் அவசர காலங்களில் காவல்துறையைத் தொடர்புகொள்வதோடு, புகார்களையும் உடனுக்குடன் பதிவு செய்ய முடியும்.

டிஜிகாப் (DIGICOP) செயலி: காவல்துறையின் பல்வேறு சேவைகளைப் பெறவும், குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் இச்செயலியைப் பயன்படுத்தலாம்.

கட்டணமில்லா எண் 10581: போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NIB-CID) பிரத்யேகமாக வழங்கியுள்ள இந்தக் கட்டணமில்லா உதவி எண்களைத் தொடர்புகொண்டு புகார்களைப் பதிவு செய்யலாம்.

வாட்ஸ்அப் எண் 94981 11124: போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத விற்பனை குறித்து இந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் ரகசியமாகத் தகவல் தெரிவிக்கலாம். தகவல் கொடுப்பவர்களின் விவரங்கள் முற்றிலும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் ஜின்னா மைதானப் பகுதியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரக்கன்று நட்டு, அதற்கு நீர் ஊற்றினார். அப்போது, "மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்; போதை இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம்" என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள், பள்ளிகல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர்.



# காவேரிப்பட்டினத்தில் மொகரம் திருவிழா: புலி வேடம் அணிந்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்

காவேரிப்பட்டினம், ஜூன்.28-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மேல் மக்கானில் நடைபெற்று வரும் மொகரம் திருவிழாவின் ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதையொட்டி, பக்தர்கள் புலி வேடம் அணிந்து தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். காவேரிப்பட்டினம் அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த ஹிமாயத் என்ற இஸ்லாமிய இளைஞர், தனது குடும்பத்தின் நேர்த்திக்கடனை முன்னிட்டு புலி வேடம் அணிந்து, மேல் மக்கானில் அமைந்துள்ள பஞ்சா அல்லாஹ் சாமியை வழிபட்டார். பின்னர், மேளதாளங்கள் முழங்க காவேரிப்பட்டினம் நகரின் முக்கிய வீதிகளில் நடனமாடி ஊர்வலமாகச் சென்றார்.

இந்த புலி வேட ஊர்வலம் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. குறிப்பாக, இளம் தலைமுறையினரும் சிறார்களும் புலி வேட நடனத்தை ஆர்வத்துடன் கண்டு ரசித்து, உற்சாகமாக மகிழ்ந்தனர்.

நகர் முழுவதும் நடைபெற்ற இந்த நிகழ்வை காண இஸ்லாமியர்கள் மற்றும் பொதுமக்கள் சாலையோரங்களில் திரண்டு நின்று கண்டு களித்தனர். மத நல்லிணக்கம் மற்றும் பாரம்பரிய கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, திருவிழாவின் முக்கிய அம்சமாக அமைந்தது.

# இளையான்குடியில் போதைப்பொருள் தடுப்பு சட்ட விழிப்புணர்வு முகாம்



இளையான் குடி, ஜூன் .28-

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணையத்தின் செயல்திட்டத்தின்படி, சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் தலைவரும் மாவட்ட முதன்மை நீதிபதியுமான ரி.அறிவொளி அறிவுறுத் தலின் படியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் செயலாளர் ரி.அனிதா கிறிஸ்டி ஆலோசனையின்படியும், இளையான்குடி வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதியுமான ஸி. மணிவர்மன் உத்தரவின்படியும், இளையான்குடி கச்சாத்தநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு பள்ளியின் தலைமையாசிரியர் டேவிட் வரவேற்புரை ஆற்றினார். இதில் வழக்கறிஞர் காளியம்மாள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, போதைப்பொருட்களால் ஏற்படும் சீரழிவுகள் மற்றும் தீமைகள் குறித்து சிறப்புரையாற்றி, மாணவர்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை வட்ட சட்டப்பணிகள் குழுவைச் சேர்ந்த இளவரசன் செய்திருந்தார். நிறைவாக, ஆசிரியர் ஜான்தங்கதுரை நன்றி கூறினார்.

# சேம்பார் நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



காளையார் கோவில், ஜூன்.28-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பள்ளி மேலாண்மை குழு தலைவி டேவிட் அருள் ஷாலினி தலைமை ஏற்றார். பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் முன்னிலையில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் சுரேஷ் பள்ளி மேலாண்மை குழு கூட்டப் பொருள்களை விளக்கினார் . 20262027 ஆம் கல்வி ஆண்டிற்கான செயல் திட்டம் பற்றி விவாதிக் கப்பட்டது. அனைத்து நலத்திட்டங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட செய்தியை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதிகமான புரவலர்களை சேர்க்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய விளையாட்டு சீருடை மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்த்தல், உயர் கல்விக்கு வழிகாட்டல், ஆதார் கைரேகை பதிவேற்றம் செய்தல், மகிழ் முற்றம் செயல்பாடுகள், மன்ற செயல்பாடுகள், மணற்கேணி செயலி தூதுவர் செயல்பாடுகள், மற்றும் ஆதார் புதுப்பித்தல் போன்ற கூட்டப் பொருட்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. செயற்கை நுண்ணறிவு (AI) பற்றி பெற்றோர்களுக்கு எடுத்து விளக்கப் பட்டது. தற்பொழுது பள்ளி இயங்கி வரும் கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனைப் பராமரிக்கவும, மேலும் புதிதாக வாங்கப்பட்டுள்ள இடத்தில் மூன்று வகுப்பறை கட்டிடம் கட்டி தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பழைய சத்துணவு அறையை இடிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் முருகன் நன்றியுரை கூறினார். பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் டேவிட் அருள் ஷாலினி, துணைத் தலைவி ஜெயா, நித்தியா, ஆரோக்கிய அருள் புனிதா, ஆரோக்கிய ரோசியா, அருள் ஜெனிபர், மீனா ரீட்டாராணி அருள் ஜேசு பவுலா, ஜெனிட்டா ராணி, ஜெஸ்போனியா, சத்தியம்மாள் லீமா ரோஸி, ஆரோக்கிய ஜோஸ்பின் டெய்சி., செபஸ்தி அம்மாள், ஆரோக்கிய ஜூலி, கலைச்செல்வி ,காளீஸ்வரி, கிறிஸ்டின் மேரி, புவனேஸ்வரி, முருக வள்ளி, ஆரோக்கிய அருள் மலர், மற்றும் நிகோமி கிறிஸ்டியா ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# மதுரையில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்



மதுரை, ஜூன் .28-

சுப்பிரமணியபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழங்காநத்தம் ரவுண்டானா பகுதியில் காவல்துறை சார்பில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. திடீர் நகர் சரக காவல் உதவி ஆணையாளர் அசோகன் தலைமையில், சுப்பிரமணியபுரம் காவல் ஆய்வாளர் செல்வகுமார் மற்றும் மதுரை தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி முன்னிலையில் நடைபெற்ற பிரச்சாரத்தில், போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.மேலும், தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவது தெரியவந்தால் உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு காவல்துறையினர் கேட்டுக் கொண்டனர்.



# சந்தையில் சிக்கிய ஆடு திருடர்கள்: தம்பதி உட்பட 4 பேரை கைது செய்தது கீழக்கரை போலீஸ்!

கீழக்கரை, ஜூன் .28-

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து ஆடுகள் திருடப்பட்டு வந்த சம்பவம், பொதுமக்களிடையேயும் கால்நடை வளர்ப்பாளர்களிடையேயும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தொடர் திருட்டு குறித்துக் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், திருடப்பட்ட ஆடுகளை விற்பனை செய்வதற்காகச் சிலர் பரமக்குடி ஆட்டுச் சந்தைக்குக் கொண்டு வந்துள்ளனர். அப்போது, ஆடுகளை இழந்த உரிமையாளர்கள் சிலர் சந்தையில் இருந்த தங்கள் ஆடுகளை அடையாளம் கண்டு, உடனடியாக கீழக்கரை காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தனர்.



தகவலின் பேரில் விரைந்து செயல்பட்ட கீழக்கரை காவல்துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர். அந்த விசாரணையில், கீழவலசையைச் சேர்ந்த செல்வம், அவரது மனைவி பவித்ரா, லட்சுமிபுரம் பகுதியைச் சேர்ந்த ராமநாதன் மற்றும் கீழக்கரை ஸ்ரீநகரைச் சேர்ந்த தமிழரசன் ஆகிய 4 பேருக்கும் இந்த ஆடு திருட்டுச் சம்பவங்களில் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, அந்த நான்கு பேரையும் காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்து திருடப்பட்ட 61 பெரிய ஆடுகள் மற்றும் 13 குட்டி ஆடுகள் என மொத்தம் 74 ஆடுகளைப் பறிமுதல் செய்து மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கீழக்கரை காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தத் தொடர் ஆடு திருட்டில் மேலும் சிலருக்குத் தொடர்பு உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது..

# தேனி மாவட்டம் சிப்காட் உணவுப் பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

தேனி, ஜூன்.28-

தேனி மாவட்டம், திண்டுக்கல்குமுளி தேசிய நெடுஞ்சாலையில் (NH183) உப்பார்பட்டிதப்புக்குண்டு பூமலைக்குண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் உணவுப்பூங்காவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,கம்பம் சட்டமன்றஉறுப்பினர் .பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

உப்பார்பட்டி தப்புக்குண்டு பூமலைக்குண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் உணவுப்பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் , கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடன், உணவுப் பூங்காவில் தொழில் நிறுவனங்கள் செயல்படுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள சாலைவசதிகள், தெருவிளக்குகள், மின்சார வசதிகள், உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்தும், மேலும், உணவுப் பூங்காவிற்கு, முல்லைப் பெரியாற்றிலிருந்து (கிணறு மற்றும் இயல்பு நீர் சேகரிப்புத் தொட்டி மூலம்) பிரதான குழாய் வழியாக சுத்திகரிப்பு நிலையத்தில் (Water Treatment Plant) சுத்திகரிப்பு செய்யப்பட்டு தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விரைவில் தொழில் நிறுவனங்களுக்கு சீரான குடிநீர் வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக சிப்காட் உணவுப்பூங்காவில் செயல்படும் தொழில்நிறுவனங்களுக்கு சீரான மின்சார விநியோகம் செய்யும் வகையில் 110/22ரிகூஷி திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்கப்பட உள்ள இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தொழில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்இவ்வாய்வில், திட்ட அலுவலர் (சிப்காட்) .சித்திரைவேல், வட்டாட்சியர் (தேனி) .சதீஸ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சி 5வது வார்டு சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

முடிச்சூர், ஜூன் .28-

செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம் பரங்கிமலை வடமேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சி 5வது வார்டு சார்பில் தமிழக வெற்றி கழக தலைவர் தமிழக முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.சரத்குமார் அவர்களின் ஆலோசனைப்படி 5வது வார்டு கழக செயலாளர் ஜே.ஞானசேகர் ஏற்பாட்டில் முடிச்சூர் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றதுஇதில் சிறப்பு அழைப்பாளராக பரங்கிமலை வடமேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செயல் ச.மணிகண்டன், முடிச்சூர் ஊராட்சி பகுதி கழகச் செயலாளர் முடிச்சூர் எச்.குட்டி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சரவணன் ஆகியோர் கலந்துகொண்டு பொது மருத்துவர் அறுவை சிகிச்சை மகப்பேறு மருத்துவர் குழந்தை நல மருத்துவர் எலும்பு முறிவு கண் தோல் உள்ளிட்ட இந்த இலவச முகாமை தொடங்கி வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட வர்த்தக அணி பழனிவேல் முருகன், யூனிக் பில்டர் லிவிங், செங்கல்பட்டு மத்திய மாவட்ட இளைஞரணி தலைமை எஸ்.பி.கௌதம், செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட இளைஞரணி விஷால், ஒன்றிணைச் செயலாளர் கமலஹாசன், ஒன்றிய செயல்கள் உறுப்பினர் ஜெயசெல்வன், முடிச்சூர் ஊராட்சி இணை செயலாளர் சாமி, முடிச்சூர் ஊராட்சி பொருளாளர் முத்துகிருஷ்ணன், முடிச்சூர் ஊராட்சி செயற்குழு உறுப்பினர் என்.செந்தில் ராஜன், எம் ராஜசேகர், பி.பிரகாஷ், எஸ்.பாலாஜி சக்கரவர்த்தி, டி.ஆனந்த், ஜி.ஆர்த்தி மற்றும் செங்கல்பட்டு வட மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் முடிச்சூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்








Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161